மகளிர் தினத்தை முன்னிட்டு

# மெட்ரோ ரயில் நிலையங்களில் 8ம்தேதி இலவச மருத்துவ முகாம்

சென்னை, மார்ச் 3: மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்புடன் இணைந்துமெட்ரோ ரயில் பயணிகள், பொது மக்கள் மற்றும் மகளிர் நலனுக்காக இலவச மருத்துவ முகாமை, வருகிற 8ம் தேதி நடத்த உள்ளது.

அன்றைய தினம் வடபழனி, ஷெனாய் நகர், விமான நிலையம், ஆலந்தூர், அசோக் நகர் மற்றும் சென்ட்ரல் ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் இலவச மருத்துவ முகாம் நடைபெறும்.

இலவச மருத்துவ முகாமில் ரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை நோய் பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும். மெட்ரோ ரயில் பயணிகள், பொது மக்கள் மற்றும் மகளிர் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.